# கற்றல் குறைபாடு
# (Learning Disability)

**Dr. Usha Nandini M.,** MD., DNB., (Psychiatry), Thanjavur.

**Tamil Psychiatry Journal, Vol. I, Issue - 2, July - September 2025, Page 37 - 38**

மனிதர்கள் பிறப்பிலேயே படிக்கவோ, எழுதவோ, அல்லது கணிதக் கணக்கீடுகளைச் செய்யவோ திறமையுடன் பிறப்பதில்லை. இந்த திறன்களை பின்பு தான் கற்றுக் கொள்ள வேண்டும். இது 100,000 ஆண்டுகளுக்கும் மேலாக மனிதர்களிடம் இருக்கும் வாய்மொழித் திறமைக்கு முரணான செய்தியாகும். குறிப்பிட்ட எண்கள் மற்றும் பேச்சு ஒலிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் குறியீடுகள் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் குறியீடுகள்தான் வாசிக்க, எழுத மற்றும் கணக்குப் போடத் தேவையானது. இந்த ஆற்றல் இயற்கையாகவே வளர்வதல்ல. மாறாக பல முறை பழக்கப்படுத்தினால்தான் மூளையில் உள்ள சில மூலைகளை முடிச்சுப்போட்டு, இம்மூன்றிலும் மனிதன் தேர்ச்சி பெறுகிறான். இது அனைவர்க்கும் எளிதில் நடப்பதில்லை. ஏனெனில், இதற்கு தனித்தனி மூலைகள் இல்லை. நம் மூளையில், முடிச்சுகள் போடுவதற்கான திறமையும் வாய்ப்பும் அனைவர்க்கும் ஒரு போல இருப்பதில்லை. கிட்டத்தட்ட ஆறு சதவிகித குழந்தைகளுக்கு எண்ணையும், எழுத்தையும் கற்றுக்கொள்வதில் பிரச்சனை வருகிறது. இதைத் தான் சுற்றல் குறைபாடு (Learning Disability) என்று அழைக்கிறார்கள்.

இந்தக் கற்றல் குறைப்பாட்டில் இருக்கிற மிகச் சங்கடமான விஷயம் என்னவென்றால், பெரும்பாலும் இந்தக் குழந்தைகள் மற்ற விஷயங்களில் மிகவும் அறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். எவ்வளவு என்றால், சில நேரங்களில் இந்தக் குறைபாடு வெளியில் தெரியாமலே சமாளித்து, வளர்த்து, நல்ல நிலைமைக்கு வந்து விடுகிறார்கள்.

மூளையின் மூலைகளினிடையே முடிச்சுகள் என்று எதை குறிப்பிடுகிறேன் என்ற சந்தேகம் எல்லோருக்கும் வந்திருக்கும். பேசுவதற்கு உள்ள மூளையின் மூலைப்பகுதியும், பார்வைக்குள்ள மூளையின் மூலையும் ஒன்றிணைந்து செயல்பட்டால் தான் எழுத்தை வாசிக்க முடியும். இவ்விரண்டும் கண்ணசைவு மற்றும் கையசைவு போன்ற செயல்களை கண்காணிக்கும் மூளையின் மூலையுடன் சேர்த்து செயல்பட்டதால் தான் எண்ணையும், எழுத்தையும் எழுதப் படிக்க முடியும். இதில் எங்காவது ஒரு இடையூறு ஏற்பட்டால் கூட, கற்றல் குறைபாடாக வெளிப்படும்.

இந்தக் கற்றல் குறைபாடு மூன்று வகைப்படும்.

1. கற்றல் குறைபாடு– குறிப்பாக வாசிப்பதில்
2. கற்றல் குறைபாடு– குறிப்பாக எழுதுவதில்
3. கற்றல் குறைபாடு– குறிப்பாக கணக்கிடுவதில்

எந்தெந்த ஆற்றலில் (வாசிப்பு, எழுதுவது, கணக்கு) குறைபாடு உள்ளதோ அந்தந்த குறிப்பிட்ட குறைபாடு உள்ளதாகக் கருதப்படுவார்கள்.

இதை DSM-5- யில் குறிப்பிட்ட வழிகாட்டுதலின் படி, இந்தக் குறைபாடு உள்ளதா என்று கண்டறிய முடியும். கற்றல் குறைபாடு உள்ளவர்களுக்கு குறைந்தது ஆறு மாதங்களுக்காவது, இதற்கான சிறப்பு பயிற்சி கொடுத்தும் குறைபாடுகள் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சுற்றல் குறைபாடுகள் கீழ்க்கண்ட வகைகளிளெல்லாம் வெளிப்படும்

1. மெதுவாக, கஷ்டப்பட்டு எழுத்துக்கூட்டி படித்தல்; அதில் நிறைய வார்த்தைகளைப் பிழையாக படித்தல்: யூகித்து குத்துமதிப்பாக படித்தல்.

2. படித்ததில் உள்ள அர்த்தம் புரியாமல் இருப்பது: ஒரு வார்த்தைக்கும் இன்னொரு வார்த்தைக்கும் இடையில் உள்ள உறவுகள் விளங்காமல் இருப்பது: வாக்கியங்களுக்கு இடையே உள்ள கூறப்படாத அர்த்தங்கள் மற்றும் உவமைகளை புரிந்து கொள்ளாமல் இருத்தல்.

3. எழுத்துப்பிழை அதிகமாக இருப்பது

4. எழுதச் சிரமப்படுவது; எழுத்துப் பிழையோடு சந்திப்பிழை: ஒரு வாக்கியம் சேர்ந்தாற் போல் எழுதுவதில் பிழை என்று நிறைய வகையான பிழைகள் ஏற்படுவது.

5. எண்கள், எண்களைக் கூட்டவோ கழிக்கவோ சிரமப்படுவது; எண்களைப் பற்றிய புரிதல் இல்லாமல் இருப்பது.

6. கணக்கு சம்பந்தமாக புரிதல் இல்லாமல் இருப்பது.

மேலே குறிப்பிட்டுள்ள சிரமங்கள் அனைத்தும் அந்தந்த வயதிற்கு ஏற்றதை விட மிகக்குறைவாக இருக்க வேண்டும். மேலும், இந்தச் சிரமங்களினால் அவர்களின் படிப்பிலும், வாழ்க்கையிலும் பல பாதிப்புகள் ஏற்பட்டிருக்க வேண்டும். இவையெல்லாம் இருந்தால்தான் கற்றல் குறைபாடு என்ற நோய் கண்டறியப்படுகிறது.

இந்த கற்றல் குறைப்பாட்டைக் கண்டறியும் கோலாக NIMHANS -இன் SLD Battery உபயோகப்படுத்த வேண்டும் என்று அரசு பரிந்துரைக்கிறது. இந்தக் கோலை பயன்படுத்துவதற்கு முதன்மையாக அந்தக் குழந்தையின் 0–80 க்கு மேலாக இருக்க வேண்டும். அதாவது கற்றல் தவிர மற்ற விஷயங்களில் ஆற்றல் குறையாமல் இருக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே சுற்றல் குறைபாடு உள்ளதா என்று கண்டறிய முடியும். இல்லையேல், Intellectual Disability அதாவது அறிவுசார் குறைபாடு உள்ளதா என்று பார்க்க வேண்டும். அறிவுசார் குறைபாடு இருந்தால் தனியாகக் கற்றல் குறைபாடு என்று கண்டறிய முடியாது.

இந்த கற்றல் குறைபாடு உள்ளவர்களுக்கு நிறைய அரசுச் சலுகைகள் உள்ளன. முதலில் Disability கார்டு–அடையாள அட்டை மருத்துவ பரிசோதனைகளுக்குப் பின் வாங்கிக் கொள்ள வேண்டும். இதை வைத்து தங்கள் எழுதும் பொதுத் தேர்வுகளில் Scribe வைத்து எழுதச் சலுகை உள்ளது. சில போர்டுகளில் (கல்வி நிலையங்களில்) நேரம் கூடுதலாக கொடுக்கவோ, சிலப் பரீட்சைகளில் இருந்து விதிவிலக்கு அழிக்கவும் பரிந்துரைகள் உண்டு. கற்றல் குறைபாடு காரணமாக குழந்தைகளின் அடிப்படைக்கல்வி தடை பெற்று விடக்கூடாது என்பதில் அரசு கவனமாக உள்ளது.

Disability அடையாள அட்டை வாங்கி இந்தச் சலுகைகளை அனுபவித்துக் கொள்ள முன் வருவதோடு. இந்தக் குறைப்பாட்டை முற்றிலும் சரி செய்ய முடியாவிட்டாலும், இந்தக் குறைபாட்டை நன்கு கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும். இதை நாம் பயிற்சியின் மூலமாக கற்று கொடுக்க வேண்டும். இதற்காக தனியாகப் படித்து தேர்ச்சி பெற்ற பிரத்யேக ஆசிரியர், Remedial Training கொடுப்பார்கள். மற்றவர்கள் எளிதாக, சாதாரணமாக கற்றுக் கொள்வதைப் போல் கற்றுக் கொள்ள முடியாத நிலையில், அவர்களுக்குப் புரியும் படியான வகையில் கற்று கொடுக்கும் முறைக்கு தான் Remedial Education என்று பெயர். இதில் பல்வேறு உக்திகளை பயன்படுத்தி இந்தக் குழந்தைகளுக்குப் புரியும்படி கற்பிப்பார்கள். இதனால் இந்தக் குழந்தைகளின் குறைபாடு மேம்பட வாய்ப்புள்ளது.

இவர்களின் தனித்துவமான ஆற்றல் எதில் உள்ளது என்று கண்டறிந்து, அதில் அவருக்குத் தனிக் கவனம் கொடுக்க வேண்டும். அந்த ஆற்றலை வைத்து வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வை மேம்படுத்தும் வழிமுறைகளைக் காட்ட வேண்டும். உதாரணத்துக்கு ஒருவனுக்கு பைக் மெக்கானிக் வேலை எளிதாகக் கற்றுக்கொள்ள முடிந்தால், அவனுக்கு எழுதுவதில் குறைபாடு இருந்தால்கூட அதைப் பெரிதுபடுத்தாமல். அவனை மெக்கானிக் வேலையில் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தால், தன் வாழ்வில் சுயமாக சொந்தக்காலில் நிற்க முடியும். இப்படித் தான் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் இந்தச் சமூகம் என அனைவரும் இணைந்து இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவ வேண்டும். கற்றல் குறைபாடு தான் உள்ளது, தன்னம்பிக்கை குறைபாடு அல்ல. இந்தக் குறைபாட்டால் முடங்கி விடக்கூடாது என்ற உந்துதல் இருந்தால் போதும், வாழ்வில் அவரவருக்கு உள்ள உச்சத்தை எட்டிவிட முடியும். குடும்பத்தினர் இவர்களுக்கு ஊன்றுகோலாக இருந்து உதவுவதின் மூலம் தேவையான உளவியல் மற்றும் மனநலச் சேவைகளை நாட கைகொடுக்க வேண்டும்.